## கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

# சிறந்த உற்பத்தி பரிச்சியம் (GMP) தொடர்பான சான்றிதழுக்கான அரச நிவாரணம்

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சினால் உள்நாட்டு கைத்தொழில்களின் பயன்பாடுகளை மேலோங்கச் செய்வதற்கு மற்றும் உணவுப் பாதுகாப்பை மேலோங்கச் செய்வதற்காக விசேட அனுசரணையொன்றை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்வரும் சிறு அளவிலான கைத்தொழில் துறை அல்லது 2026 ஜனவரி 01ஆம் திகதியில் வருடாந்த புரள்வாக 675 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்த மற்றும் 125 ஊழியர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட கைத்தொழில் துறைகளுக்கு (GMP) தரச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| • பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்திகள் | • பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை சார்ந்த உற்பத்திகள் | • பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகள் |
| • பெறுமதி சேர்க்கப்பட்ட வாசனைத் திரவிய உற்பத்திகள் | • பெறுமதி சேர்க்கப்பட்ட தும்பு மற்றும் தும்பு சார்ந்த உற்பத்திகள் | • பொதியிடல் உற்பத்திகள் |

**நன்மைகள்:**

- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்கு அதிகபட்சம் 100,000.00 ரூபா வரையான சான்றிதழ் கட்டணம் செலுத்தப்படும் என்பதுடன் பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்ததன் பின் குறித்த கட்டணம் பிரதியீடு செய்யப்படும்.
- நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படும் காலத்தினுள் தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும்.

**தகுதித்தன்மை :**

- குறைந்தபட்சம் 01 வருடத்திற்கான உற்பத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் வேளையில் கைத்தொழில் வெற்றிகரமான செயற்பாட்டில் இருக்க வேண்டும்.
- விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் வேளையில் குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு சான்றுபடுத்தல் நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்காத கைத்தொழிலாக இருக்க வேண்டும்.

**தெரிவு செய்யும் செயற்பாடுகள் :**

- பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் நேர்முகத் தேர்வின்போது உறுதி செய்துகொள்ளும் விடயங்களின் பிரகாரம் மேற்கூறிய துறையுடன் தொடர்புடைய 50 உற்பத்திக் கைத்தொழில் தெரிவு செய்யப்படும்.

**ஏனைய நிபந்தனைகள் :**

- இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) அல்லது இலங்கை அங்கீகார அதிகாரசபை (SLAB) அங்கீகாரம் பெற்ற சான்றுபடுத்தும் நிறுவனத்தின் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.
- சான்றிதழ் மற்றும் பற்றச்சீட்டுகளை 2026 ஒக்டோபர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன் அமைச்சிற்குச் சமர்ப்பித்து குறித்த சான்றிதழ் கட்டணத்தை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும்.
- குறித்த கைத்தொழில் சான்றுபடுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் காலத்தினுள் வேறு அரச நிறுவனங்களிடமிருந்து இதற்குச் சமமான அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடாது.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் தமது நிறுவனத்தின் சான்றுபடுத்தல் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டமைக்காக அமைச்சுடன் இணக்க உடன்படிக்கைக்கு கட்டுப்பட வேண்டும்.
- நிறுவன குழுமத்தைக் கொண்ட தொழில்முயற்சியாயின் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒரு நிறுவனத்திற்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பித்தல்:**

பின்வரும் QR குறியீட்டின் மூலம் அல்லது கூகுல் லிங்க் (google link) மூலம் அல்லது கையால் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை பதிவுத் தபாலில் 2026 மார்ச் மாதம் 27ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

**முகவரி: பணிப்பாளர்,**
**அபிவிருத்திப் பிரிவு 1,**
**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு,**
**73/1, காலி வீதி,**
**கொழும்பு 03.**

மேலதிக விபரங்களுக்கு: 0112422319 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அல்லது foodsymp2024@gmail.com/sector1mid@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.industry.gov.lk எனும் இணையதளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை**
**அபிவிருத்தி அமைச்சு,**
**73/1, காலி வீதி, கொழும்பு 03.**

**Google Link : https://forms.gle/ZLrGDPvLDoaNrMDp9**